Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : OS.No.18/2017
Witness for Prosecution : PW1
Name : கணேசன் Taluk :
Father's / Husband Name : கரியன் (எ) பெரிய முனியப்பன் Calling :
Village : பெண்ரஹள்ளி Age : 64

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.09.2025 administered by **MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, POCHAMPALLI**

துவக்க நேரம்– 12.22 PM

**பி.வா.சா.1 ஆஜர். வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1) சின்ன முனியப்பன் என்கிற முனியப்பன் மற்றும் கரியன் என்கிற முனியப்பன் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி சின்ன முனியப்பன் என்பவர் மகன் என்றால் சரிதான். நான் கரியன் என்கிற முனியப்பன் என்பவரின் மகன் என்றால் சரிதான். சின்ன முனியப்பன் என்கிற முனியப்பன் மற்றும் கரியன் என்கிற முனியப்பன் ஆகியோர் 27.09.1940 கிரைய பத்திரத்தின் படி சர்வே எண்.51/2 ல் மற்றும் 55/2 ல் 1 1/2 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இருவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான்.**

**2) வாதி மாதனின் தந்தை சின்ன முனியப்பன் என்கிற முனியப்பன் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் மேற்படி வீடு வாதி மாதனுக்கு ஒதுக்கப்பட்டு அதில் அவர் குடியிருந்து வந்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் மேற்படி வீடு உள்ளது என்றால்**

**சரிதான். தாவா சொத்தினை வாதியின் தந்தை சின்ன முனியப்பன் என்கிற முனியப்பன் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான்.**

**3) மேற்படி தாவா சொத்திற்கு பெரிய முனியப்பன் மற்றும் மாரியப்பன் ஆகியோர் பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 20.02.2017 ல் வாதியின் உரிமையை மறுத்து சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் இவ்வழக்கு வாதி தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வாதிக்குரிய பரிகாரம் வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.**

**(3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

முடிவு நேரம் 12.35 PM.

"Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct."

Sd/- D.Saravanan
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)